**செய்தி வெளியீடு எண்: 181** **நாள்: 04.03.2020**

**<u>இன்று (4.3.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை:</u>**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

**இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்து**

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர்
**திரு. ஓ.பன்னீர்செல்வம்** அவர்களே!

சிறப்புரை ஆற்றிய
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர்
**திரு. கே.பி.அன்பழகன்** அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
**டாக்டர். சி.விஜயபாஸ்கர்** அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

முன்னாள் அமைச்சர் திரு.கே.பி.முனுசாமி அவர்களே!

முன்னாள் மக்களவை துணைத் தலைவர் டாக்டர் மு.தம்பித்துரை அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர்
**திரு. க.சண்முகம்** அவர்களே!

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்
செயலாளர் **திருமதி பீலா ராஜேஷ்** அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
**திரு. எஸ்.பிரபாகர்** அவர்களே!

மாவட்ட ஊராட்சித் தலைவர் அவர்களே!

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே!

கூட்டுறவு சங்க நிர்வாகிகளே!

பெரியோர்களே, தாய்மார்களே !

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாங்கனியின் சுவையும், ரோஜா மலரின் வாசனையும் நிரம்பிய கிருஷ்ணகிரி மாவட்டம் போலுப்பள்ளியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைய உள்ள புதிய மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கிருஷ்ண தேவராயரின் ஆட்சி காலத்தில் இருந்து, இப்பகுதி "கிருஷ்ணகிரி" என அழைக்கப்படுகிறது. அவரால் கட்டப்பட்ட கிருஷ்ணகிரி கோட்டைக் கொத்தளம் இன்றைக்கும் இங்கு உள்ளது.

இந்த மாவட்டத்திலுள்ள தளி என்ற ஊரை ஆங்கிலேயர்கள் குட்டி இங்கிலாந்து என்று அழைப்பார்கள். 1824ஆம் ஆண்டு, ஆயிரத்து 642 ஏக்கர் பரப்பளவில், ஆங்கிலேயர்களால் தொடங்கப்பட்ட "குதிரை வளர்ப்பு மையம்" இந்த மாவட்டத்தில் தான் உள்ளது.

ஓசூர் பல பெரிய தொழிற்சாலைகளைக் கொண்ட நகரமாக விளங்குகிறது. 1992–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட 'சிப்காட்' மற்றும் 'சிட்கோ' தொழிற்பேட்டைகள் இப்பகுதி மக்களுக்கு பல ஆண்டுகளாக வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கின்றது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2004ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தை பிரித்து, கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை உருவாக்கி இந்தப் பகுதிக்கு பெருமை சேர்த்தவர்.

மாம்பழத்திற்கு மிகவும் பிரபலமான கிருஷ்ணகிரியில், அகில இந்திய மாங்கனி கண்காட்சி, 1993ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஜுன்–ஜுலை மாதங்களில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்று உயர்ரக மாம்பழங்களை உருவாக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணகிரி–பாகலூரில் உள்ள ரோஜா தோட்டங்களில் மலரும் ரோஜா மலர்கள், உள்நாட்டு தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமன்றி, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. ஆகவே, இப்படிப் புகழ் பெற்ற ரோஜா, மல்லிகை சாமந்திப் பூ அதிகமாக உற்பத்தியாகின்ற மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். அதனாலேதான் இங்கிருக்கின்ற நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பகுதியிலே ஒரு சர்வதேச மலர் ஏல மையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். கடந்த ஆண்டு,

மரியாதைக்குரிய அண்ணன் கே.பி.முனுசாமி அவர்கள் என்னைச் சந்தித்து, மக்களுடைய, விவசாயிகளினுடைய எண்ணங்களை என்னிடத்திலே பிரதிபலித்தார், நீங்கள் அவசியம் வருகின்ற சட்டமன்றக் கூட்டத்தொடரிலே 110 விதியின் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க, இந்த விவசாய பெருங்குடி மக்களுடைய எண்ணங்களை ஈடேற்றுகிற வகையிலே, 20 கோடி ரூபாய் செலவிலே சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டேன். சர்வதேச மலர் ஏல மையம் அமைக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டது.

விலங்கு மற்றும் பூச்சிகளால் மனிதர்களுக்கு ஏற்படும் நோய் கட்டுப்பாட்டு நிறுவனம் இம்மாவட்டத்திலுள்ள ஓசூரில் இயங்கி வருகிறது.

நெடுங்கல் மற்றும் கிருஷ்ணகிரி நீர் தேக்கம், ராம நாயக்கன், பாரூர் உள்ளிட்ட ஏரிகளும், தென் பெண்ணையாறு, மார்கண்டேய ஆறு போன்ற ஆறுகளும், இம்மாவட்டத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றுகின்றன.

இத்தகைய பெருமை வாய்ந்த இம்மாவட்டத்தில் பள்ளிகள், கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் அதிக அளவில் உள்ளன. ஆனால் இந்த மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரி இல்லை.

“**மக்களால் நான், மக்களுக்காகவே நான்**” என்ற மாண்புமிகு அம்மாவின் அமுத மொழிக்கு ஏற்ப செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மாவின் அரசு, இப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, இம்மாவட்டத்தில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய அரசின் ஆணையைப் பெற்று இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கப்படும் மருத்துவக் கல்லூரியையும் சேர்த்து 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கிட குறுகிய காலத்தில் மத்திய அரசின் ஆணையைப் பெற்று, சாதனை படைத்த ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசுதான் என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த மருத்துவக் கல்லூரி 2021–22ஆம் கல்வி ஆண்டு முதல் 150 மாணவர் சேர்க்கையுடன் தொடங்கப்படும். இக்கல்லூரி துவங்குவதற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள கல்லூரி முதல்வர் மற்றும் சிறப்பு அலுவலரை நியமனம் செய்தும், இந்த ஆண்டு கட்டடப் பணிகளுக்காக 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய அரசு அம்மாவினுடைய அரசு. இப்பணிகள் விரைவாகத் தொடங்கப்பட்டு அடுத்த ஆண்டு

இந்தக் கல்லூரி தொடங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்கின்றேன். சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து 2011 வரை தமிழகத்திலே 1945 இடங்கள் தான் புதிதாக மருத்துவம் படிக்கக்கூடிய சூழ்நிலை இருந்தது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற வரை சுமார் 885 இடங்களை அதிகமாக உருவாக்கினார்கள். அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா வழியிலே வந்த அம்மாவினுடைய அரசு கடந்த ஆண்டு 350 இடங்கள் அதிகமாக உருவாக்கியது. தற்போது 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கியதன் மூலமாக 1650 இடங்கள் கிடைக்கும். ஆக மொத்தம், 2000 மருத்துவ இடங்களை மாண்புமிகு அம்மாவினுடைய அரசு புதிதாக உருவாக்கியிருக்கிறது. குறுகிய காலத்தில் இவ்வளவு எண்ணிக்கையுள்ள மருத்துவர்கள் படிக்கக்கூடிய சூழ்நிலையை எங்களுடைய அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவக் கல்லூரிகளாகவும், மருத்துவமனைகளாகவும் திகழும் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இப்பொழுது அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் சென்றால் வெளிப்புறத்தில் காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அந்த நிலையைப் போக்குவதற்காக சுமார் 250 நபர்கள் வரை அமரக்கூடிய அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு ஹாலும் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். இதை எதற்காகச் சொல்கிறேனென்று சொன்னால், கிராமப்புறத்திலே மக்கள் தரும ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்று சொல்வார்கள். தற்போது, அரசு மருத்துவமனைகள் தனியார் மருத்துவமனையைவிட கூடுதல் மருத்துவ வசதியுடைய மருத்துவமனையாக உருவாகி வருகின்றன. இனி எதிர்காலத்தில் மக்கள் தனியார் மருத்துவமனைக்கு போவதற்குப் பதிலாக அரசு மருத்துவமனையை நாடி வருகின்ற காலம் விரைவில் உருவாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

நானும், நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் லண்டன் சென்றிருந்தபொழுது, அங்கே சுமார் 90 சதவிகிதம் பேர் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை அறிந்தோம். அதேபோல, தமிழ்நாட்டிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய மருத்துவமனைகளை 11 மருத்துவக் கல்லூரிகளிலும் உருவாக்கப்படும். ஏற்கனவே செயல்பட்டு வருகின்ற மருத்துவமனைகளிலும் கூடுதல்

வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். கேன்சர் நோயால் பாதிக்கப்பட்டால் அதனைக் கண்டுபிடித்து உயர்தர சிகிச்சை அளிக்கக்கூடிய சுமார் 20 கோடி மதிப்புள்ள கேன்சரை குணப்படுத்தக்கூடிய கருவியை நம்முடைய 10 மருத்துவக் கல்லூரிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். சென்னை, ஓமந்தூரார் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலும் வழங்கியிருக்கிறோம். இந்த வசதி தனியார் மருத்துவமனையில்கூட கிடையாது. இது முற்றிலும் இலவசம். ஏழை, எளிய மக்களுக்கு கேன்சர் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அதைக் குணப்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிய அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இரண்டு கைகளையும் இழந்த ஒருவருக்கு இரண்டு கையையும் பொருத்தி சாதனை படைத்த அரசு எங்களுடைய அரசு.

அதேபோல, பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிலே பல்வேறு அறிவிப்புகளை நான் வெளியிட்டேன். அந்த அறிவிப்புகளை எல்லாம் நாங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலே ஓசூர் நகரம் மாநகராட்சியாக அறிவிக்கப்படும் என்று சொன்னோம், அதை அறிவித்திருக்கிறோம்.

கிருஷ்ணகிரி நகராட்சியை சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்படும் என்று சொன்னோம், செய்திருக்கின்றோம்.

தென் பெண்ணை ஆற்றின் உபரி நீரை கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள வறட்சியான 18 கிராமங்களில் உள்ள 35 ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்வதற்கும், தும்பளஹள்ளி அணைக்குக் கூடுதல் நீர் கொண்டு வருவதற்கும் எண்ணேகோள் அணைக்கட்டின் வலது மற்றும் இடதுபுறங்களில் புதிய வழங்கு கால்வாய் அமைக்க ரூபாய் 276 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணி நிறைவு பெற்றவுடன் கால்வாய் அமைக்கும் பணி துரிதமாக நிறைவேற்றப்பட்டு, இந்தப் பகுதியிலிருக்கின்ற விவசாயிகளுக்கு நீர் வழங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். தென்பெண்ணை ஆற்றிலிருந்து உபரி நீரைக் கொண்டு மாவட்டத்திலுள்ள ஏரிகளை நிரப்புவதற்காக ரூபாய் 67 கோடி மதிப்பீட்டில் அழியாலம் வாய்க்கால் திட்டமும் ரூபாய் 80 கோடி மதிப்பீட்டில் 33 ஏரி பாசனத் திட்டமும்

செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நில எடுப்புப் பணிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

எங்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் நீர் மேலாண்மைத் திட்டத்தைக் கொண்டு வந்து அதற்காக ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்தி, அதற்காக ஓய்வு பெற்ற 5 பொறியாளர்களை நியமித்திருக்கின்றோம். இரண்டு ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர்கள், 3 ஓய்வு பெற்ற கண்காணிப்புப் பொறியாளர்களை அமைத்து ஒன்றரை ஆண்டு காலமாக தமிழ்நாடு முழுவதும் சுற்றி, எங்கெங்கெல்லாம் நீர் ஆதாரம் இருக்கின்றதோ அதனை பாதுகாக்கும் வகையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. அதேபோல, பருவ காலங்களில் பெய்கின்ற மழை நீர் ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் இருப்பதற்காக தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. இதற்காக மூன்றாண்டு காலத் திட்டமாக ரூபாய் 1000 கோடி ஒதுக்கி, தற்போது ரூபாய் 650 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு வேளாண் பெருமக்களுடைய நீண்ட காலக் கோரிக்கைகள் எங்களுடைய அரசால் நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகின்றேன். அதேபோல, வானிஒட்டு, திண்டல், கொட்டாவூர் வாய்க்கால், கொடியாலம் நீரேற்றுத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே அரசம்பட்டி மற்றும் பெண்டரஹள்ளி ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

‘‘**இந்தியாவின் முதன்மை மாநிலம் மட்டுமின்றி, முன்னோடி மாநிலமான தமிழ்நாடு, சுகாதார சேவைகளை வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நலவாழ்வு குறியீடுகளை அடைய அரசு உறுதி ஏற்றுள்ளது**’’ என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு இன்று, தொலைநோக்குப் பார்வையுடன் சுகாதாரத் துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மட்டும் இத்துறைக்கு 75 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு நிகழ்த்தியுள்ள சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

- ஊரகப் பகுதியில் உள்ள மக்களின் நலனைப் பேணுவதற்காக, அம்மாவினுடைய அரசு 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்திருக்கின்றது. அதேபோல, 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைக்கு நிலை உயர்த்தப்பட்டிருக்கின்றன. 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கின்றது.
- மாவட்டந்தோறும், ஆரம்ப சுகாதார நிலையங்களில், நவீன இணையவழி கண் பரிசோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இம்மையங்களில் பணிபுரியும் கண் பரிசோதகர்கள், நோயாளிகளை பரிசோதித்து அதன் விவரங்களை வலைதள சேவை மூலம், மாவட்ட மருத்துவமனையில் உள்ள கண் மருத்துவர்களுக்கு அனுப்பி, அவர்கள் வழங்கும் அறிவுரையின் பேரில் சிகிச்சை வழங்கப்படுகிறது. இந்த நடைமுறையால் சர்க்கரை நோயால் ஏற்படும் விழித்திரை நோய், கண் புரை நோய், கண் நீர் அழுத்த நோய் ஆகிய நோய்களுக்கு , கிராமப் பகுதி மக்கள் அவர்கள் வாழும் பகுதிக்கு அருகிலேயே உயர் சிகிச்சை பெறலாம்.
- மாண்புமிகு அம்மா அவர்கள், மருத்துவப் பணியாளர்கள் தேர்வுக்கென தனியே மருத்துவ பணியாளர் தேர்வு வாரியம் ஒன்றினை அமைத்திருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 13 ஆயிரத்து 537 பணியாளர்கள் இத்தேர்வாணையத்தின் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்தை பொறுத்தவரை தற்போது ஒரு மாவட்ட தலைமை மருத்துவமனை, 5 வட்டார மருத்துவமனைகள், ஒரு வட்டம் சாரா மருத்துவமனை, 56 கிராமப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 13 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 239 துணை சுகாதார நிலையங்கள் ஆகியவை ஏழை, எளிய மக்களுக்கு மருத்துவ மற்றும் சுகாதாரச் சேவைகளை வழங்கி வருகின்றது.

இது தவிர, மாண்புமிகு அம்மாவின் அரசு, இம்மாவட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மலைப் பிரதேசம் நிறைந்த இந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 18 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கியிருக்கின்றோம்.

குடிமராமத்து திட்டத்தின் மூலமாக விவசாய பெருங்குடி மக்கள் தேவையான நீரை பெறக்கூடிய அளவிற்கு, 651 பணிகள் 14 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விவசாய

பெருங்குடி மக்களின் முழு ஒத்துழைப்போடு இந்த மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆகவே, பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் வீணாகாமல் அங்கேயே தேக்கி வைப்பதற்காக முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் கீழ், மாவட்டம் முழுவதும் **30,273** மனுக்கள் பெறப்பட்டது. அனைத்து மனுக்கள் மீது தீர்வு காண்பதற்காக ஆய்வு செய்யப்பட்டு, தகுதியான மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அவற்றில் **5,460** ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற மனுக்களுக்கு, அனுமதி அளிக்கப்பட்டு, தற்போது ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

நான் செல்கின்ற இடத்திலெல்லாம், சட்டப்பேரவை உறுப்பினரும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தெரிவித்தார்கள், முதலமைச்சர் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தை நீங்கள் துவக்குங்கள், அதன் மூலமாக மக்கள் அரசை நாடி மனு கொடுப்பதற்கு பதிலாக அரசாங்கமே நேரடியாக சென்று மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களுடைய பிரச்சினையை தீர்ப்பதுதான் இந்த சிறப்பு முகாமினுடைய நோக்கம். அதனடிப்படையிலே இந்த மாவட்டத்தில் **30,273** மனுக்கள் பெறப்பட்டு, தகுதி வாய்ந்த மனுக்கள் தீர்வு காணப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு மூன்றே மாதங்களில் சுமார் **5,460** முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. உழைக்கும் திறனற்ற, வயது முதிர்ந்த ஏழை குடும்பத்தைச் சேர்ந்த முதியோர்களுக்கு அம்மாவின் அரசு மாதந்தோறும் **1,000** ரூபாய் வழங்க வேண்டுமென்ற அடிப்படையில் **5** லட்சம் நபர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பு கொடுத்து, இந்த மாவட்டத்தில் **5,460** முதியோர்களுக்கு ஓய்வூதியம் கொடுத்திருக்கிறோம்.

இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கின்றபொழுதே ஏழை, எளிய மக்களுக்கு கல்வி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்கள். புரட்சித் தலைவி அம்மா கொடுத்த திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மாணவச் செல்வங்களுக்கு கொண்டு சென்று, அந்த மாணவச் செல்வங்கள் நல்ல முறையிலே கல்வி கற்கும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு காலணி, சீருடை, விலையில்லா புத்தகம், நோட்டு, புத்தகப்பை, உரிய நேரத்தில் பள்ளிக்கு செல்வதற்கு விலையில்லா சைக்கிள், அறிவுபூர்வமான கல்வி பெறுவதற்கு விலையில்லா மடிக்கணினி ஆகியவற்றைக்

கொடுத்த அரசு அம்மாவின் அரசு. இந்தியாவில் எந்த அரசும் கொடுக்கவில்லை. ஆகவே தான் இன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமான கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. 2011 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கின்றவரை 100க்கு 34 பேர் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியிலே கொண்டு வந்த புரட்சி, மறுமலர்ச்சியின் காரணமாக, மற்ற துறையைக் காட்டிலும் அதிக நிதி ஒதுக்கியதன் விளைவாக, கிராமம் மற்றும் நகரத்தில் படிக்கின்றவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிக்கும் எண்ணிக்கை உயர்ந்ததன் விளைவாக இன்றைக்கு கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 49 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இந்தியாவிலேயே, உயர்கல்வி படிப்பதிலே முதல் மாநிலம் தமிழ்நாடு தான். அதுமட்டுமல்ல, புரட்சித்தலைவி அம்மா இருக்கும்பொழுது, 65 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு 12 அரசு கலைக் கல்லூரிகளை கொடுத்து, மொத்தம் 77 அரசு கலைக் கல்லூரிகளை அம்மாவின் அரசு கொடுத்துள்ளது.

அதேபோல, மருத்துவக் கல்லூரி, வேளாண் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, பொறியியல் கல்லூரி என்று ஏராளமான கல்லூரிகளைக் கொடுத்ததன் விளைவு உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்து, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது என்று பெருமையோடு தெரிவிக்க விரும்புகின்றேன். இம்மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு 12 ஆயிரத்து 273 விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

நான்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் 72 கோடியே 74 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஓசூர் மாநகராட்சியில் குடிநீர் பணிகளை மேம்படுத்திட 87 கோடியே 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், அம்ருத் திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 27,379 பயனாளிகளுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கின்றபொழுது, ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற வேண்டுமென்றால், மருத்துவக்

காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக 2 லட்சம் ரூபாய்க்கு மருத்துவ வசதி பெறலாம். இது போதாது என்று மக்களிடத்திலேயிருந்து கோரிக்கை வந்தது. கூடுதலாக செலவாகின்றபொழுது அந்த ஏழை, எளிய மக்கள் தங்கள் கையிலிருந்து பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது, இதை மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்தவுடனே அம்மாவினுடைய அரசு, மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் 2 லட்சத்திலிருந்து 5 லட்சமாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம்.

மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் **17,000** குறு, சிறு விவசாயிகளுக்கு **133 கோடியே** ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளன.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ், 2,057 பேர் பசுமை வீடுகளை பெற்றிருக்கின்றார்கள்.

- கிராமப் புறத்தில் இருக்கும் பெண்கள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கினார்கள். அதன் மூலமாக **13,263 சுய உதவி குழுக்களுக்கு** அம்மாவினுடைய அரசு **685** கோடி ரூபாய் கடனுதவி வழங்கி அவர்களுடைய பொருளாதாரம் மேம்பாடு உயர வழிவகுத்த அரசு அம்மாவினுடைய அரசு.
- 1,000 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- படித்த பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் அரை பவுன் இருந்ததை ஒரு பவுன் உயர்த்தியிருக்கிறோம். திருமண நிதியுதவியாக ரூ.25,000 மற்றும் ரூ.50,000 வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.
- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 23,569 விவசாயிகளுக்கு 1000 ரூபாய் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக வழங்கப்படுகின்றது.
- இந்த மாவட்டத்தில் மட்டும் 21,629 முதியோர்களுக்கு 1000 ரூபாய் மாத ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.
- 10 ஆயிரம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் காலணி பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை பர்கூர் சிப்காட் தொழில் வளாகத்தில் 360 கோடி ரூபாய் மதிப்பில் நிறுவப்பட்டுள்ளது.

- கிருஷ்ணகிரி கே.ஆர்.பி அணையில் மதகுகளை சீரமைக்க 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இது விவசாய பெருமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.
- கிருஷ்ணகிரி நகராட்சியில் சுமார் 37 கோடி ரூபாய் மதிப்பிலான பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- ஒசூரில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாண்புமிகு அம்மாவின் அரசால் அமைத்துத் தரப்பட்டுள்ளது.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக மார்க்கண்டையன் ஆற்றின் குறுக்கே குப்பச்சிபாறையை இணைக்கும் வகையில் ஒரு உயர் மட்டப் பாலமும், தென்பெண்ணையாற்றின் குறுக்கே **காமன்தொட்டியில்** ஒரு உயர்மட்டப் பாலமும் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி பல திட்டங்கள் இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இது போன்ற எண்ணற்ற திட்டங்கள் இந்த மாவட்ட மக்களின் நலனுக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

**“முன்னேற்ற பாதையிலே மனது வைத்து**
**அதற்காக முழுவீச்சாய் தினம் உழைத்து**
**மண்ணிலே முத்தெடுத்து பிறர் வாழ**
**வழங்கும்  குணம் உடையோன் விவசாயி”**

என்ற புரட்சித் தலைவரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, ஒரு விவசாயின் உணர்வோடு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மக்கள் அமைதியுடன், வளமையுடன் வாழ்வதற்கு திட்டங்களை தீட்டியும், நாள்தோறும் அயராத பாடுபட்டுக் கொண்டிருக்கும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. ஆனால் மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் திட்டங்களின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ளாமல், தவறான கண்ணோட்டத்துடன் பார்த்து, பொய்யான தகவல்களை சில எதிர்க்கட்சிகள் மக்களிடம் பரப்பி வருகிறார்கள்.  அவர்களும் குழம்பி, மக்களையும் குழப்பி வருகிறார்கள். இதை கூறும் நேரத்தில், கதை ஒன்று எனக்கு நினைவுக்கு வருகிறது.

ஒரு சமயம், பாண்டவர்களுக்காக துரியோதனனிடம் தூது வந்துவிட்டு திரும்பி கொண்டிருந்தார் பகவான் கிருஷ்ணர். அவர் ஊரை தாண்டி விட்டாரா என்று அறியும்

ஆவலில், மாடிக்கு சென்று கண்ணுக்கு எட்டிய தூரம் வரை தெருவையே பார்த்துக் கொண்டிருந்தான் துரியோதனன்.

அந்தச் சமயம், துரியோதனனுடைய குருவான துரோரணரின் மகன் அஸ்வத்தாமன் வெளியூர் சென்று திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது வழியில் பகவான் கிருஷ்ணரைக் கண்ட அசுவத்தாமன், மரியாதை நிமித்தமாக வணக்கம் தெரிவித்தான். பதிலுக்கு வணக்கம் செலுத்தும்போது, பகவான் கிருஷ்ணரின் மோதிரம் கீழே விழுந்தது.

உடனே அஸ்வத்தாமன், அதனை எடுத்து, பகவான் கிருஷ்ணரிடம் நீட்டினான். அப்பொழுது அதனை கவனிக்காத அவர், வானத்தை பார்த்துக் கொண்டிருந்தார். மேலும், ‘‘**அஸ்வத்தாமா, வானத்தைப் பார், மேகங்கள் சூழ்ந்துள்ளது. இன்று மழை வருமா ?’’** என்று கேட்டார்.

உடனே வானத்தை நோக்கி பார்த்து அஸ்வத்தாமன் **‘‘இன்று மழை வரும்’’** என்று கூறியபடி, பகவான் கிருஷ்ணரிடம், அந்த மோதிரத்தை கொடுத்தான். அன்பின் வெளிப்பாடாக அவனது கரத்தை பிடித்துக் கொண்டு பகவான் கிருஷ்ணர் வாழ்த்து கூறினார்.

இதனை அரண்மனை மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த துரியோதனன் தவறுதலாக அர்த்தம் செய்து கொண்டான். துரியோதனன் மனதில் ஓடிய வஞ்சனைக்கேற்ப வசனங்களை தவறாகவே கற்பனையும் செய்து கொண்டான்.

“ஆஹா இந்த அஸ்வத்தாமனை நண்பன் என்று நினைத்தேன். அவன் கிருஷ்ண பகவானிடம் பணிந்து பேசுகிறான். இவன் எப்படி அவரிடம் அவ்வாறு பேசலாம்,” என எண்ணிக் கொண்டான்.

மேலும், கீழே கிடந்த மோதிரத்தை எடுக்க அஸ்வத்தாமன் கீழே குனிந்ததையும், மழை வருமா என்ற கேள்விக்கு பதில் அளிக்க வானத்தை நிமிர்ந்து பார்த்ததையும், மோதிரம் கொடுக்க நீட்டிய கையை கிருஷ்ண பகவான் பற்றிக் கொண்டதையும், தவறாக கற்பனை செய்து கொண்டு,

“கிருஷ்ண பகவானிடம் மண்ணறிய, விண்ணறிய துணையாக நிற்பேன் என்று கையை பிடித்து அஸ்வத்தாமன் சத்தியம் செய்வதாக கற்பனை செய்து கொண்டான்’’ துரியோதனன்.

இக்கதையில் வரும் துரியோதனனை போலத்தான், சில எதிர்க் கட்சியினர் மாண்புமிகு அம்மா அரசின் நல்ல பல திட்டங்களின் உண்மைத்தன்மை புரியாமல், **எதிர்க்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில்** தாங்களும் குழம்பி, மக்களையும் குழப்பி, அரசியல் ஆதாயத்திற்காக அவதூறுகளை பரப்பி வருகின்றனர். அவர்கள் யார் என்பது உங்களுக்கு புரியும், தெரியும்.

இங்கே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதையெல்லாம் அரசின் பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, படிப்படியாக நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்து, புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

<u>அறிவிப்புகள்</u>

1. கிருஷ்ணகிரி நகராட்சி பகுதியில் உள்ள 5 முக்கிய சாலைகளில் விபத்தை குறைக்கும் வகையில் மைய தடுப்பு மற்றும் விளக்கு வசதி 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.
2. கிருஷ்ணகிரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகிலுள்ள சின்னஏரியை, சுமார் 3 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபாதை பூங்கா மற்றும் மின்விளக்குகள் அமைத்து, நிலத்தடி நீரினை சேமித்து சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்கப்படும்.
3. புதிய மருத்துவக் கல்லூரி அருகிலுள்ள போலுப்பள்ளி கிராமத்தில் சுமார் 72 லட்சம் மதிப்பீட்டில் புதிய வனக் களஞ்சியம் (Eco-Tourism Park) அமைக்கப்படும்.
4. ஓசூர் கால்நடை மருத்துவமனை, சுமார் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பன்முக கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.
5. ஓசூர் – கிருஷ்ணகிரி நெடுஞ்சாலையில் புதிய மருத்துவமனை அருகே நோயாளிகள் மற்றும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய தரைவழி மேல்மட்ட பாலம் அமைக்கப்படும்.

6. மருத்துவக் கல்லூரியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு, தென்பெண்ணை ஆற்றின் அருகில் சுத்திகரிப்பு நிலையத்துடன் திறந்தவெளி கிணறு அமைத்து, 2 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் தனியே ஓர் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. கிருஷ்ணகிரி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காட்டிநாயனப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தென்னையன்கொட்டா என்ற இடத்தில் சாலை விபத்துகள் தடுக்கும் வகையில், 14.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலம் அமைத்துக் கொடுக்கப்படும்.

8. கிருஷ்ணகிரி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் பர்கூரை அடுத்த அங்கிநாயனப்பள்ளி என்ற இடத்தில் சாலை விபத்துகள் தடுக்கும் வகையில், 1 கோடியே 35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், ஓர் உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்கப்படும்.

9. கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்ததாளப்பள்ளி மற்றும் கட்டிகானபள்ளி ஊராட்சிகளில் அடங்கிய 39 குக்கிராமங்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய, தென்பெண்ணை ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு, தனியே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

10. கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெல்லம்ப்பள்ளி, செம்படமுத்தூர் ஊராட்சிகளில் அடங்கிய 11 குக்கிராமங்களுக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய தென்பெண்ணை ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு, திறந்தவெளி கிணறு அமைத்து, 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தனியே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும்.

11. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் சுமார் 2 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கட்டடம் கட்டித் தரப்படும்.

12. காவேரிப்பட்டிணம் ஒன்றியத்தில், சந்தாபுரம் – சௌட்டஉறள்ளி ஊராட்சி, பள்ளிப்பட்டி கிராமத்தை இணைக்கும் வகையில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஓர் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்.

13. கட்டிகானப்பள்ளி, பெத்ததாளப்பள்ளி, செங்கடாபுரம் ஆகிய கிராமங்களில் 13 சாலை மேம்பாட்டுப் பணிகள் 1 கோடியே 35 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.
14. ஒசூர் நகராட்சியில், பிரதம மந்திரி அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் சுமார் 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படும்.
15. கிருஷ்ணகிரி நகரத்தில் உள்ள கால்நடை மருந்தகம், சுமார் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்படும்.

பெங்களூரு நகரத்தில் மக்கள் பயன்பாட்டிற்காக மெட்ரோ ரயில் திட்டம்–1 பெங்களூர் நகரை ஒட்டி வரை அமைக்கப்படுவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த கர்நாடக எல்லைப் பகுதியிலிருந்து நம்முடைய ஒசூர் நகரம் வரை மெட்ரோ ரயில் திட்டத்தை நீட்டிப்பதற்காக அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் குறித்து உலகமே அஞ்சும் நிலை வருகிறது. சீனா போன்ற நாடுகளில் இதன் பாதிப்பு அதிகமாக உள்ளது. இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் இருக்க, வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் பரிசோதிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் சில நபர்களுக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாக கண்டறியப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் கொரோனா பாதிப்பு யாருக்கும் இருப்பதாக இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும், நோய் தடுப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மருத்துவமனைகளை ஆயத்த நிலையில் வைக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியாளர்கள் முழு வீச்சில் போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகின்றனர். பொதுமக்கள் இதுபற்றி அச்சப்படத் தேவையில்லை, என்றாலும், அடிக்கடி கைகளை

சோப்பு போட்டு சுத்தம் செய்து கொள்வதன் மூலமும், சளி, இருமல் பாதிக்கப்பட்டவர்கள் கைக்குட்டை, முகக்கவசம் போன்றவற்றை பயன்படுத்துவதன் மூலமும் இதுபோன்ற தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க முடியும். அதுமட்டுமல்லாமல், காய்ச்சல், சளி, இருமல், மூச்சுத் திணறல் ஏதாவது ஏற்பட்டால், உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். நம்முடைய தமிழகத்தில் கொரோனா நோய் இதுவரை வரவில்லை, அந்த பயம் நமக்குத் தேவையில்லை. இருந்தாலும், நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காக இதை நான் தெரிவிக்கின்றேன். அதேபோல, இதுபற்றி எடுக்கப்படும் தொடர்நடவடிக்கைகள் பற்றி ஆய்வை நானும் நேரடியாக மேற்கொள்ள உள்ளேன். எனவே பொதுமக்கள், தனிநபர் சுகாதாரத்திற்கு அதிக அளவு முக்கியத்துவம் தரவேண்டும் என இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் நலனை பேணிக் காப்பதிலே முதன்மை மாநிலமாக விளங்குகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் எத்தனை மாநிலங்கள் இருந்தாலும் கூட, இப்பொழுது மத்திய அரசின் மூலமாக அறிவிக்கப்பட்டது மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனுள்ள தரவரிசையில் முதலிடம் பெற்ற மாநிலம் தமிழ்நாடு. அதேபோல, துறைகள் வாரியாக மிகச் சிறப்பான முறையிலே நிர்வாகத் திறமையின் அடிப்படையில் இன்றைக்கு பல்வேறு சாதனைகளை புரிந்ததன் விளைவாக, இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் தான், பல துறைகளிலே தேசிய விருதுகளைப் பெற்று சாதனை படைத்த அரசாக நம்முடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். எங்களுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட,

கிராமப்புறத்தில் வாழ்கின்ற மக்களுடைய தேவைகளை அறிந்து, அவர்களுக்காக நன்மை செய்யக்கூடிய ஒரே அரசு அம்மாவினுடைய அரசு. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வழியிலே, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா வழியிலே பீடுநடை போட்டு, தமிழகத்திலே ஏழை என்ற சொல் இல்லை என்ற நிலையை உருவாக்குவது தான் எங்களுடைய லட்சியம்.

இந்த அரசு மருத்துவக் கல்லூரி வருவதற்கு பேருதவியாக இருந்த நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களுக்கும், அவருக்குத் துணையாக நின்ற துறை செயலாளர் அவர்களுக்கும் இந்த மருத்துவக் கல்லூரி உதயமாவதற்கு உறுதுணையாக நின்ற வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**